1972 மார்ச் 10]

எல்லாப் பள்ளிகளிலும் இந்த இயக்கம் இல்லை. எல்லாப் பள்ளிகளிலுமே இந்த இயக்கம் நிறுவப்பட வேண்டுமென்ற அடிப்படையில் தான் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அதுபற்றிய அறிக்கை வந்த பிறகு அரசு கூர்ந்து கவனித்து தக்க முடிவினை மேற்கொள்ளும்.

வேலூரிலுள்ள அரசு மருத்துவ மனை

*408 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகராகிய வேலூரில் உள்ள அரசினர் மருத்துவ மனையில் (Special Wards) தனிப் பிரிவு வார்டுகள் தற்போது எத்தனை உள்ளன?

(இ) அதை மேலும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) நான்கு படுக்கைகள் கொண்ட 'சி' கிளாஸ் பிரிவு ('C' Class Ward) ஒன்று அரசு தலைமை மருத்துவமனை வேலூரில் உள்ளது.

(இ) இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, வேலூர் வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரம். அங்குள்ள மருத்துவமனையில் உள்ள தனிப்பிரிவில் நான்கு படுக்கைகள் என்பது மிகவும் குறைவானது. போதிய படுக்கை வசதிகள் இல்லாமலிருப்பதால் மக்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். இன்னும் அதிகமான படுக்கைகளைப் போட அங்கே வசதி இருக்கிறது. ஆகவே படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த 'சி' கிளாஸ் பிரிவில் நான்கு படுக்கைகள் உள்ளன. இது தவிர, மகப்பேறு மருத்துவ மனைக்கு நான்கு படுக்கைகள் கொண்ட 'சி' கிளாஸ் தனிப்பிரிவு ஒன்று கட்டுவதற்கு வரைபடம் தயாரிக்கப் படுகிறது. வரைப்படம் வந்தவுடன் கட்டடம் கட்டப்படும். இது

தவிர, ஏற்கெனவே அங்கே வெள்ளிவிழா அல்லது டைமன்ட் ஜூபிலி நடைபெற்றபோது, அதற்கென்று ஒரு சிறு தொகையைத் திரட்டித் தந்திருக்கிறார்கள். அந்தப் பணமும் இந்தக் கட்டடப் பணிக்குச் செலவிடப்படும்.

திருமணமான செவிலியர்களுக்கு குடியிருப்புகள்

*409. வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமணம் ஆன Nurses செவிலியர்களுக்கு ஆங்காங்குள்ள மருத்துவ மனைக்குள்ளோ அல்லது அருகிலோ அவர்கள் தத்தம் குடும்பங்களோடு வாழ்வதற்கு தக்க வகையில் இல்லங்கள் அமைத்துத் தரும செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, செவிலி உதவியாளர்கள், 12 மணி நேரத்திற்குமேல் வேலைசெய்கிறார்கள். அவர்களுடைய பணியும் கடைநிலை ஊழியர்களோடு ஒப்பிடப் படுகிறது. அவர்களின் வேலை நேரத்தை 8 மணி அளவுக்கு குறைக்க வேண்டுமென்றும், அவர்களின் பணியை சுப்பீரியர் காடரில் சேர்க்க வேண்டுமென்றும் கோரி வருகிறார்களே. இதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த துணைக் கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டதல்ல. செவிலியர்களுக்கு மருத்துவ மனைக்குள்ளோ அல்லது அருகிலோ குடும்பம் நடத்துவதற்கு வசதியாக இல்லங்கள் அமைத்துக் கொடுக்கப்படுமா என்பது மூலக் கேள்வி. செவிலியர்களிலிருந்து